22.03.2024

<u>கூடுதல் அமா்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமா்வு வழக்கு எண். 24/2016</u>

அ.சா.17

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜயா | | |
| க/பெ | ஏழுமலை | | |
| கிராமம் | மேல்வெங்கமூர் | தொழில் | |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 46/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளா் அவா்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறாா்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது திண்டிவனம் நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 13.04.2011ந் தேதி கெடாா் காவல் நிலையத்தில் நான் முதல் நிலை காவலராக பணியிலிருந்த போது கெடாா் காவல் நிலைய கு.எண்.71/2011, இ.த.ச.பிரிவு302 வழக்கின் முதல் தகவல் அறிக்கையை துரித தபால் மூலம் விழுப்புரம் குற்றவியல் நீதித்துறை நடுவா் எண்.2 அவா்களிடம் ஒப்படைக்க வேண்டி அன்று த.கா. 1151 திரு.உத்திரமணி என்பவா் என்னிடம் ஒப்புவித்த தபாலை நீதித்துறை நடுவா் பொறுப்பு வகித்து கள்ளக்குறிச்சி நீதித்துறை நடுவரிடம் ஒப்புவித்தேன். இது சம்மந்தமாக என்னை ஆய்வாளா் விசாரித்தாா்கள்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

நான் எத்தனை மணிக்கு தபால் வாங்கினேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எத்தனை மணிக்கு நான் கள்ளக்குறிச்சியை அடைந்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

**<u>3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

நான் காவல் துறை விசாரணையில் விழுப்புரம் நீதித்துறை நடுவா் எண்.2 அவா்களிடம் விரைவு தபாலை கொடுத்ததாக சொல்லியுள்ளேன். நான் கொடுத்த விரைவு தபால் அங்கு சோ்ந்தது என்பதற்கு என்னிடம் அத்தாட்சி வழங்கப்பட்டதா என்றால் போலீஸ் பாஸ்போா்ட்டில்

கையெழுத்து போட்டு தந்தார்கள். நான் காவல் துறை விசாரணையில் கள்ளக்குறிச்சி நீதித்துறை நடுவரிடம் ஒப்படைத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். *(3ம் எதிரி தரப்பில் 1ம் எதிரி தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகள் தமதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.)*